திருவள்ளூர் மாவட்டக் கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை: திரு.ச.சண்முகானந்தம்,

செ.மு.ந.க. 2899 / 2021 / அ2 நாள் 11.12.2023

பொருள் பணியமைப்பு – கருவூலக் கணக்குத்துறை – திருவள்ளூர் மாவட்டக் கருவூல அலகு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.செ.லதா, இளநிலை உதவியாளர், மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் – பணி வரன்முறை – ஆணை வழங்கல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை நிலை எண் 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு 1)த் துறை நாள்: 02.06.2016
2. அரசாணை நிலை எண் 100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018
3. ஆணையர், கருவூலக் கணக்குத்துறை அவர்களின் ந.க.எண் 16844 / 2021 / சி1, நாள் 11.08.2021
4. கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் அவர்களின் செ.மு.ந.க.2899 / 2021 / அ2, நாள் 18.08.2021
5. கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.2899 / 2021 / அ2, நாள் 05.07.2022
6. அரசாணை (3ப) எண் 64, நிதி(கருவூலக் கணக்கு – 2)த் துறை, நாள் 01.11.2023

*************

<u>ஆணை :</u>

கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவது தொடர்பாக, மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பணிநியமனம் வேண்டி காத்திருப்போர் பட்டியலில், முதுநிலை வரிசையின்படி 05.08.2020 அன்று பணியிடை மரணமடைந்த திரு.K.R.செந்தில்குமார், உதவி கணக்கு அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு பிரிவு) அவர்களின் வாரிசுதாரர் மற்றும் மனைவியுமான திருமதி.செ.லதா, அவர்களுக்கு பார்வை 3ல் காணும் ஆணையர் கருவூலக் கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் படி, திருவள்ளூர் மாவட்டக் கருவூல அலகில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது. பார்வை 4ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் படி, தனியர் மாவட்டக் கருவூலம் திருவள்ளூரில் 18.08.2021 முற்பகல் பணியேற்பு செய்துள்ளார். தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியான 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். தனியர் பணியேற்பு செய்த நாளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட 18 வயதினை பூர்த்தி செய்துள்ளார்.

பார்வை 5ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில், தனியரின் கருணை அடிப்படையிலான பணியினை பணிவரன்முறை செய்யும் பொருட்டு கருத்துரு கருவூலக் கணக்குத்துறை ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

பார்வை 6ல் காணும் அரசாணையில், "இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திருமதி.S.லதா என்பவரின் தற்காலிகப் பணிநியமனமானது, இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும், திருமதி.S.லதா, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை தனியர் பணியேற்ற நாளான 18.08.2021 முற்பகல் முதல் அவர் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்கு வேண்டும் என்ற நிபந்தனைகுட்பட்டு வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடப்பட்டதைத்" தொடர்ந்து தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனை) சட்டம் 2016ன் படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 18.08.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை வரன்முறை செய்வதால் பணிவிதிகளுக்குட்பட்டு, ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதேனும் இருப்பின் அவைகளைப் பெற விதிகளின்படி, திருமதி.செ.லதா, இளநிலை உதவியாளர் மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் அவர்கள் தகுதியுடையவராகிறார்.

மேற்காணும் பணியாளர் பணிவரன்முறைப்படுத்திய நாளிலிருந்து தகுதிகாண் பருவத்திலிருத்தி ஆணையிடலாகிறது. மேலும் தகுதிகாண் காலத்திற்குள் கணக்குத் தேர்வு பாகம் I, கணக்குத் தேர்வு பாகம் II மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை முடிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

11/12/23

கருவூல அலுவலர்
திருவள்ளூர்

11/12/23

பெறுநர்

1. திருமதி.செ.லதா, இளநிலை உதவியாளர்,
   மாவட்டக் கருவூலம், திருவள்ளூர் – 602 001
2. இருப்புக்கோப்பு (அ2 பிரிவு)

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது</u>

ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை – 600 035